Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 14, 2021


வியாழக்கிழமை ஒக்டோபர் 14, 2021 | ஒளி: 07 கதிர்: 126 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## திலகமிட்டார்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரி பூஜை, அலரிமாளிகையில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது. அதன்போது, தனது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திலகமிட்டார். இந்த நவராத்திரி பூஜையில், பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும் முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன்சுவாமியும் பங்கேற்றார்.

( மேலதிக படங்கள் 7 ஆம் பக்கத்தில்)



### வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

# திங்களன்று விவசாய போராட்டம்

### டக்ளஸுக்கு எதிராக ஞாயிறன்று கடல்வழி போராட்டம்

■ என்.ராஜ்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல கமநல சேவை அலுவலங்களுக்கு முன்னால், எதிர்வரும் திங்கட்கிழமை, போராட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## யாழில் கோவில்களுக்குள் பாதணியுடன் திரிந்த பொலிஸ் அதிகாரி

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் நேற்று (13) விஜயம் செய்த பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன வரலாற்றுச் சிறப்புமிக்க துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோவில் ஆகியவற்றுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தொடர்ச்சி P2

## கப்டன் இல்லாத கப்பலாக நாடு தத்தளிக்கிறது

### அரசாங்கத்தை சாடுகிறார் மனோ எம்.பி



புதிய மிதக்கும் வாக்காளர்களின் நம்பிகையைப் பெற்று, பதவிக்கு வந்த இந்த ஆட்சியாளர்கள், தமது முட்டாள்தனமான கொள்கைகளால், இந்நாட்டை இன்று கப்டன் இல்லாத கப்பலாக நடுக்கடலில் தத்தளிக்க விட்டார்கள் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### அயல் நாடுகளின் ஸ்திரத்தன்மையை

## பிராந்தியப் பாதுகாப்பில் இந்தியா எதிர்பார்க்கிறது

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் இந்திய இராணுவத்தின் பிரதானி

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய இராணுவத்தின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவானே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (13) சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் அயல் நாடுகளின் ஸ்திரத்தன்மையை,

தொடர்ச்சி P2

## பெயிலான அரசாங்கத்துக்கு தக்க பதிலடி காத்திருக்கிறது

■ எஸ்.கணேசன்



அரசாங்கம் FAIL (பெயில்) என்பதை மக்களும் ஏற்றுக்கொண்டுவிட்டனர். எனவே, மாகாண சபைத் தேர்தலொன்று நடைபெற்றால், அரசாங்கத்துக்கு தக்க பதிலடி காத்திருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற

தொடர்ச்சி P2



## கொழும்பு மாணவர்களுக்கு நாளை ஃபைசர் தடுப்பூசி

கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு, ஹோமகம, பிலியந்தல, ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய கல்வி வலயங்களில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மற்றும் ஏற்கெனவே ஒரு தடவை தோற்றிய 18 மற்றும் 19 வயது மாணவர்களுக்கு ஃபைசர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாளை (15) முன்னெடுக்கப்படவுள்ளதென கல்வி அமைச்சின் மேலதிக

தொடர்ச்சி P2

## அதிபர், ஆசிரியர் தொடர் போராட்டம்




தங்களுடைய சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைக்குத் தீர்வாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கையை ஏற்க மறுத்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள், தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நேற்று (13) தீர்மானித்துள்ளன.

பிரதமருடன் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில், முக்கிய

தொடர்ச்சி P2

### பிணை முறி மோசடி:

## அர்ஜுன் மகேந்திரன் இல்லாமல் விசாரணை



முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் பேர்பேச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளரான அஜஹான் கார்டி புஞ்சிஹேவா ஆகிய பிரதிவாதிகள் இன்றி, மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி வழக்கு விசாரணையை தொடருமாறு கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம், நேற்று (13) கட்டளையிட்டது.

தொடர்ச்சி P2

### இராகலையில் ஐவரை பலியெடுத்த தீ விவகாரம்:

## பெற்றோல் வாங்கிய மகனுக்கு விளக்கமறியல்



நுவரெலியா, ராகலை பகுதியில் தனி வீடொன்று தீப்பற்றி எரிந்தமையால், ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் உயிரிழந்தனர். அச்சம்பவத்தை அடுத்து, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீயில் கருகி மரணமடைந்த தங்கையா என்பவரின் மகனான இரவீந்திரன் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சுப்ரமணியன் சுவாமியுடன் ஜீவன் தொண்டமான் பேச்சு



■ ஆ.ரமேஸ், பீ.கேதீஸ்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன்சுவாமி, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2



### தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்தல்:

## கரன்னாகொடவுக்கு எதிரான அதி குற்றச்சாட்டுகள் வாபஸ்

தமிழ் இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அதி குற்றச்சாட்டுப் பத்திரத்தை

தொடர்ச்சி P2



## சட்டவிரோதமாக சுறா பிடிப்பு

திருகோணமலையில் சட்டவிரோதமாக சுறா பிடிப்பு இடம்பெறுவது தொடர்பாக விசாரணை ஒன்றை மீன்பிடித் திணைக்களம் ஆரம்பிக்கவுள்ளது.

கடல் பாதுகாப்புக் குழுவான 'த பேர்ள் புரொக்டட்டர்ஸ்' ஆனது, திருகோணமலையில் உள்ளூர் சுறா இனங்களை மீனவர்கள் கொல்வதாக அறிக்கையிட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## நாய் உண்ணும் பெண் கைது



வீதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து, அவற்றைக் கொன்று, இறைச்சியாக்கி சாப்பிடும் பெண்ணொருவர் பாணந்துறையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறிய தள்ளுவண்டியில் நாய்கள், நாய்க்குட்டிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் அப்பெண்,

தொடர்ச்சி P2

### மாகாண சபைகள் அழிவுக்கு

## சி.விக்கு இடங்கொடுக்காத த.தே.கூதான் காரணம்

■ வா.கிருஸ்ணா



சுமார் மூன்றரை வருடங்களாக மாகாண சபைகள் அழிந்துபோய் இருப்பதற்குக் காரணம், தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தான் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற

தொடர்ச்சி P2

## கிழக்கு முதலமைச்சர் வேட்பாளர் பிள்ளையான்?

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கக்கூடும் என அறியமுடிகின்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 'மொட்டு' கூட்டணியின் சார்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகவே அவர் களமிறக்கப்படலாம் என அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# திங்களன்று விவசாய போராட்டம்

அங்கு தொடர்ந்துரைத்த அவர், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விவசாயிகள், உரத்தைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளார்கள் எனவும் குறிப்பாக, தென் பகுதியிலும் இந்த பிரச்சினையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அங்கும் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்று காரணமாக, மக்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்வது நல்ல விடயமல்ல எனத் தெரிவித்த அவர், அது சமூகப் பொறுப்புக்கும் மாறானது என்பதைக் கருத்தில் கொண்டு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து கமநல சேவைத் திணைக்களங்களுக்கும் முன்னால், குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் மாத்திரம் ஒரே நேரத்தில் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுப்பதென தீர்மானித்துள்ளதாகவும் கூறினார்.

“குறிப்பாக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 28 கமநல சேவைநிலையங்கள் இருக்கின்றன. அனைத்து நிலையங்களுக்கும் முன்னால், 18ஆம் திகதி திங்கட்கிழமையன்று, காலை 9 மணிக்கு, சமூக இடைவெளியை பின்பற்றி, தற்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். எமக்கு பசளை கிடைக்கும் வரை போராட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்” என்றும், சுமந்திரன் தெரிவித்தார்.

அதேபோல் அத்துமீறும் இந்திய இழுவை படகுகளால் வடக்கு மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

குறித்த இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துவதற்கு ஏற்கெனவே சட்டமூலம் இயற்றப்பட்டுள்ளது. அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்த தயங்குகின்றது.

குறிப்பாக, கடற்றொழில் அமைச்சராக தமிழர் ஒருவர் இருக்கின்றமையால், அவர் அதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் இலகுவான விடயம்.

ஆனால் அவர் அதனை செயற்படுத்தாதன் காரணமாக, இந்திய இழுவைப் படகுகளின் தொல்லையால், வடக்கு பகுதியில் மீனவர்களைப் பெரிதாக பாதிக்கின்றது.

எனவே, குறித்த சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (17) முல்லைத்தீவு கடலில் இருந்து பருத்தித்துறைக்கு கடல் வழியாக வந்து அமைச்சர் டக்ளஸ்க்கு எதிராக போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம் என்றார்.

# யாழில் கோவில்களுக்குள்
## பாதணியுடன் திரிந்த பொலிஸ் அதிகாரி

வடக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்பில் நேரில் ஆராய்வது சம்பந்தமாக கிளிநொச்சியில் இன்று (14) நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பார்.

இதேவேளை, காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி கொட்டாச்சி என்பவரே, இவ்வாறு மத நியதிகளை மீறி, வல்லிபுர ஆழ்வார், தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில்களுக்குள் பாதணியை கழற்றாமல் திரிந்துள்ளார்.

# சட்டவிரோதமாக சுறா பிடிப்பு

இறந்த சுறாக்களின் படங்களுடன் இக்குற்றம் இடம்பெறுவதாக டுவீட் செய்திருந்த இக்குழு, ஒரு காலத்தில் கடல் பல்வகைமை இடமாக இருந்தது தற்போது ஆபத்திலிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது.

நிலாவெளி, புறா மலை ஆகியனவே ஒரு சில, சுறாக்களுடன் நீந்தக் கூடிய இடங்களாகும் என இக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இவ்விடயமானது மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் கவனத்தில் கொண்டு வரப்பட்டதையடுத்து, இது தொடர்பாக விசாரிப்பதற்காக மீன்பிடித் திணைக்களத்தின் அதிகாரிகள் திருகோணமலைக்கு விஜயம் செய்வார்கள் எனக் கூறியுள்ளார்.

தவிர, ஆரம்ப விசாரணைகள் முடிவடைந்ததும், இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# பெயிலான அரசாங்கத்துக்கு
## தக்க பதிலடி காத்திருக்கிறது

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சீனா, இந்தியா, அமெரிக்காவின் அழுத்தங்களால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகள் வரக்கூடும். முறையற்ற அரச முகாமைத்துவம் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டும். நாட்டின் நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்நிலைமையை நான் அன்றே சுட்டிக்காட்டினேன். பிரதேச சபையில்கூட அங்கம் வகிக்காத ஒருவரின் நாட்டை ஒப்படைக்க வேண்டாமென வலியுறுத்திவிட்டு, கட்சியில் இருந்து வெளியேறினேன். மாகாணசபைத் தேர்தல் தற்போது அவசியமில்லை. அரசாங்கம் அதனை நடத்தினால் தேர்தலில் போட்டியிடவேண்டிய நிலை எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படும் என்றார்.

# கப்டன் இல்லாத கப்பலாக நாடு தத்தளிக்கிறது

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மனோ எம்பி மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது,

தொழிற்படும் அரசாங்கம் இல்லாத, தலைவர் இல்லாத, வழிகாட்டி இல்லாத நாடாக போய் விட்டது. திக்குத் தெரியாமல், திசை தெரியாமல் இந்நாடு அல்லாடுகிறது. மக்கள் விலைவாசியால் விழி பிதுங்குகிறார்கள். இதற்கு இந்த அரசின் ஒரே பதில் உலகம் முழுக்க, கொரோனா பரவி எமது நாட்டினதும் பொருளாதாரத்தை அழித்து விட்டது என்பதாக மாத்திரமே இருக்கிறது.

கொரோனா உலகம் முழுக்க இருக்கிறது. தெற்காசியாவில் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் இருக்கிறது. ஆனால், அங்கெல்லாம் பொருளாதாரம் இப்படி அழியவில்லை. விலைவாசி இப்படி நூறு மடங்கு உயரவில்லை. மக்களின் வருமானம் உடைந்து விழவில்லை.

தெற்காசியாவின் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் எப்படி எங்களுக்கு கடன் தரும் நிலையில் தங்கள் பொருளாதாரத்தை தக்க வைத்துள்ளார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இந்தியாவுக்கும், பங்களாதேஷுக்கும் இல்லாத வரப்பிரசாதம் இந்நாட்டுக்கு இருக்கிறது. அதுதான் நாம் ஒரு தீவு. வெளியில் இருந்து கொரோனா வந்து எம்மை அழிக்க முடியாத நாடாக இது இருந்தது என்றார்.

# அர்ஜுன் மகேந்திரன் இல்லாமல் விசாரணை

மேற்குறிப்பிட்ட பிரதிவாதிகள் இருவரும் இன்றி, வழக்கு விசாரணையைத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கின் பிரதிவாதிகள் இருவரும் தற்போது வெளிநாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வழக்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் நேற்று (13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, வழக்கின் முதலாவது பிரதிவாதியான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், தற்போது சிங்கப்பூரில் வசிக்கிறார் என்று தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான, அவரை நாடுகடத்துவதற்கான ஒப்படைக்கும் செயன்முறை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் இடம்பெற்று வருவதாகவும் அறிவித்தார்.

# கொழும்பு மாணவர்களுக்கு நாளை ஃபைசர் தடுப்பூசி

செயலாளர் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாளை கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. அரச அனுசரணையின் கீழ், ஜனாதிபதியின் விசேட அறிவுறுத்தலுக்கமைய இதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. மாணவர்களுக்கான சிறப்பான பரிசாகவே அரசாங்கம் இதனை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு மத்திய நிலையங்களிலும் அதிக எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களுக்கு அவர்களது பாடசாலைகளிலேயே தடுப்பூசி செலுத்தப்படும்.

இது தொடர்பான அறிவித்தல் கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்படவுள்ளதுடன், அந்தந்த பாடசாலை அதிபர்களுடன் தொடர்புகொண்டு இதனை வினவலாம் என்றார்.

இவ்வாறு தடுப்பூசி செலுத்திக்கொள்ள வரும் மாணவர்கள், அடையாள அட்டையை கொண்டு வருவது அவசியமாகும். 21ஆம் திகதிக்குப் பின்னர், நாடு முழுவதும் 18 மற்றும் 19 வயது மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும். இந்த செயற்பாட்டுக்கு பெற்றோர், பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார்.

# பிராந்தியப் பாதுகாப்பில் இந்தியா எதிர்பார்க்கிறது

தமது நாடு அதிகளவில் எதிர்பார்க்கிறது என்று தெரிவித்தவாறு, ஜெனரல் தனது கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

தான் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில், இந்தியாவில் பெற்ற இராணுவப் பயிற்சிகள், தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய இராணுவப் பயிற்சிகளின் மூலம் நம் நாட்டு இராணுவ அதிகாரிகளுக்குக் கிடைக்கும் தலைமைத்துவப் பண்புகள் குறித்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

பல தேச எல்லைகளால் சூழ்ந்துள்ள இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, மலைசார்ந்த கடினமான பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கான நலத்திட்டங்கள், தலைமைப் பயிற்சிபெறும் அதிகாரிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் பரிந்துரைக்கும் தரநிலைகள் போன்ற விடயங்களை, ஜெனரல் மனோஜ் முகுந்த், ஜனாதிபதியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

படைப் பிரிவொன்றின் தளபதியாக நியமனம் பெற்ற பின்னரே, தலைமைத்துவப் பயிற்சிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் அனுப்பப்படுவர் என்றும் தெரிவித்த ஜெனரல், அந்தந்தத் தரநிலையினர் ஒய்வுபெறும் வயதெல்லைகள் குறித்தும் விவரித்தார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளில் சுமார் ஆயிரம் பேர், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கமைய, மேற்படி இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மேலும் 50 இராணுவ அதிகாரிகளுக்கு, எதிர்காலத்தில் விசேட பயிற்சிப் பாடநெறிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, திருகோணமலை - 4ஆம் மைல்கல் பிரதேசத்தில் தான் பணியாற்றிய காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் நினைவுகள், தற்போதைய இந்த விஜயத்தின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்றும், ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில், அந்த நினைவுகள் பற்றிக் கலந்துரையாடக் கிடைத்தமை தொடர்பில், ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இந்திய இராணுவத் தலைமையகத்தின் பயிற்சிகளுக்கான கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரஜீவ் தாபர், இராணுவ ஆலோசகர் ஜெனரல் விக்ராந்த் விளாஸ் நாயக், வெளிவிவகாரப் பிரிவின் உறுப்பினர் கேர்ணல் மந்தீப் சிங் தில்லன், ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோரும், கலந்துகொண்டிருந்தனர்.

# பெற்றோல் வாங்கிய மகனுக்கு விளக்கமறியல்

அத்துடன், எதிர்வரும் 25 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.குணதாச நேற்று முன்தினம் (12) மாலை உத்தரவிட்டுள்ளார்.

வீடு தீப்பற்றி எரிந்த போது அணைக்க வந்த மக்களிடம் வீட்டில் யாரும் இல்லையென பொய் கூறியதாகவும் பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அதனையடுத்தே, மகனான தங்கையா இரவீந்திரன் கைது செய்யப்பட்டார்.

சம்பவ தினத்தன்று தங்கையாவின் மகன் இரவீந்திரன் இராகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் கொள்வனவு செய்துள்ளார் என்பதும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# சுப்ரமணியன்சுவாமியுடன் ஜீவன் தொண்டமான் பேச்சு

கொழும்பில் உள்ள இராஜாங்க அமைச்சரின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நேற்று (13) இடம்பெற்றது.

இந்நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரான அமரர் ஆறுமுகன் தொண்டமானின் உருவப்படத்துக்கு சுப்ரமணியன்சுவாமி மலர்தூவி அஞ்சலி செலுத்தி நினைவு கூர்ந்தார்.

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர உறவு தொடர்பாகவும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் வாழ்க்கை நிலை மற்றும் முன்னெடுக்கப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பிலும் இருவருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாய் உண்ணும் பெண் கைது

அதனை கொன்று, வெட்டி சமைத்து உண்கிறாள் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அவ்வாறே தள்ளுவண்டியில் நாய்களை ஏற்றிக்கொண்டு அப்பெண், கடந்த 12ஆம் திகதியன்று செல்கையில், வழிமறித்த பிரதேசவாசிகள் நாய்களை விட்டுவிடுமாறு அப்பெண்ணிடம் கோரியுள்ளனர்.

ஆவேசமடைந்த அப்பெண், தள்ளுவண்டியிலிருந்த இரும்பு வாளி உள்ளிட்ட பொருள்களைக் கொண்டு சுற்றிநின்றவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு முயன்றுள்ளார்.

இதுதொடர்பில் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

தனக்கு அருகில் வரும் நபர்கள் மீது பாய்ந்து தாக்குதல் நடத்தமுயலும் அப்பெண், பையொன்றில் மறைத்துவைத்திருந்த கத்தியைத் தேடி எடுத்து, குத்துவதற்கு முயன்றுள்ளார். இறுதியில், இந்த விவகாரம் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, அப்பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

# கரன்னாகொடவுக்கு எதிரான அதி குற்றச்சாட்டுகள் வாபஸ்

மீளப்பெற தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று (13) அறிவித்தார்.

2008ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்கள் உட்பட 11 பேர் கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் பிரதிவாதியாக அறிவிக்கப்பட்ட அவருக்கு எதிராக அதிகுற்றச்சாட்டுப் பத்திரம் பகிரப்பட்டது.

கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றத்தில் தனக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் எடுத்த தீர்மானத்துக்கு தடை உத்தரவு கோரி, கரன்னாகொடவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா, தம்மிக கணேபொல ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று (13) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

# சி.விக்கு இடங்கொடுக்காத த.தே.கூதான் காரணம்

உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றஞ்சாட்டினார்.

வட மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் மீண்டும் முதலமைச்சராக வரக்கூடாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மேற்கொண்ட செயற்பாடே, இதுவரையில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமைக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனை, தென் எருவில்பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், ‘உங்களுக்கு வீடு - நாட்டுக்கு எதிர்காலம்’ எனும் வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதற்கட்ட நிதி, நேற்று (13) வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட 33 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிவநேசதுரை சந்திரகாந்தன் எம்.பி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

# அதிபர், ஆசிரியர் தொடர் போராட்டம்

அறிவிப்பொன்றை விடுப்பதாக தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்தன.

அதனடிப்படையில், நேற்றையதினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் 31 தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டு, தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளன.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு மூன்று கட்டங்களாக தீர்வு காண்பதற்காக அரசாங்க தரப்பின் யோசனைகள் முன்வைக்கப்பட்டது. அதன்பிரகாரம் முதல் கட்டமாக 2022 ஜனவரியில் தீர்வு வழங்குவதாகவும் இரண்டாம், மூன்றாம் கட்டங்களின் கீழ் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு 2023 இல் தீர்வு வழங்குவதாகவும் அரசாங்கம் தெரிவித்தது. அதனை ஏற்க மறுத்த தொழிற்சங்கங்கள், தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது என தீர்மானித்துள்ளன.

# கிழக்கு முதலமைச்சர் வேட்பாளர் பிள்ளையான்?

அவ்வாறான தீர்மானமொன்று எட்டப்படுமாயின், பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் அவர் இராஜினாமா செய்வார் என்றும் அவரது கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் கருத்துத் தெரிவிக்கையில், “கிழக்கு மாகாண மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கட்சி எடுக்கும் தீர்மானத்துக்கு பிள்ளையான் ஒத்திசைவார்” என்றார். மாகாண சபைத் தேர்தல்களை 2022 முற்பகுதியில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயத்தில்...





இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன்சுவாமி, மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவிலுக்கு நேற்று (13) சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.





விசேடமான பயிற்சி துறையில்

# தொழில்நுட்பம் பெரும் பங்குவகிக்கும்

எதிர்காலத்தில் விசேடமாக பயிற்சி துறையில் தொழில்நுட்பம் என்பது பெரும் பங்குவகிக்கும் என நம்பிக்கை வெளியிட்ட இந்திய இராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் முகுந்த் நராவனே, மாதிரி தொழில்நுட்ப பயிற்சி உபகரணத் தொகுதியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.



அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, அலரி மாளிகையில் நேற்று (13) சந்தித்தார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்து, உபகரணத் தொகுதியையும் கையளித்துள்ளார்.

இருநாட்டு இராணுவத்தினருக்கும் இடையே சிறந்த உறவு காணப்படுவதாக சந்திப்பின் ஆரம்பத்திலேயே ஜெனரல் நராவனே பிரதமரிடம் குறிப்பிட்டார்.

நேர்மறையான இந்த தொடர்பானது, இருநாட்டு மக்கள் மற்றும் அனைத்து மட்டத்திலுமான இருதரப்பு உறவை உறுதிப்படுத்துவதற்கு உதவியுள்ளதாகவும் தெரிவித்தார்.

உயர் பயிற்சிகளை வழங்கல் உள்ளிட்ட இந்திய இராணுவம் மிக நீண்டகாலமாக இலங்கைக்கு வழங்கிவரும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராட்டு தெரிவித்தார்.

இவ்விஜயத்தின் போது ஜெனரல் நராவனே அநுராதபுரம் திசாவெளவில் அமைந்துள்ள இலங்கை இராணுவ சேவை செயலணி பயிற்சி பாடசாலைக்கு ஓட்டுநர் மற்றும் துப்பாக்கிச் சுடல் பயிற்சிகளுக்காக பயன்படுத்தக்கூடிய மாதிரி தொழில்நுட்ப பயிற்சி உபகரணத் தொகுதியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் பிரதமரிடம் கருத்துத் தெரிவித்த ஜெனரல் நராவனே, எதிர்காலத்தில் விசேடமாக பயிற்சி துறையில் தொழில்நுட்பம் பெரும் பங்குவகிக்கும். நிலையான இராணுவத்தை பேணுவதற்கான செலவை கருத்திற் கொள்ளும் போது, மாதிரி தொழில்நுட்ப பயிற்சி உபகரணத் தொகுதிகளின் மூலம் பயனுள்ள செயற்பாட்டை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என ஜெனரல் நராவனே சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதம், பயங்கரவாதம் தொடர்பில் பிராந்திய மட்டத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன் நாட்டிற்காக சேவையாற்றிய பின்னர் படைவீரர்களை கண்காணித்து பராமரிப்பதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன்போது வலியுறுத்தப்பட்டது என பிரதமர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

புத்தளம் - சிலாபம் பிரதான வீதியின் செங்கல்ஓயா பாலத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் (12) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.




இவ்வாறு உயிரிழந்தவர், வீரகெலேவத்தை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரென பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துச் சம்பவம் இடம்பெற்ற வேளை, சிலாபத்திலிருந்து புத்தளம் பகுதியை நோக்கிச் சென்ற பஸ், எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை அங்கிருந்தவர்கள் சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆடையணிந்து செல்வதில் பிரச்சினை இல்லை

ஆட்சியாளர்கள் ஆடையணிந்து செல்வதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. நாட்டு மக்கள் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றே அரசாங்கத்திடம் கோரியதாக ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.



இதுதொடர்பில் மேலும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், பொருள்களின் விலை அதிகரிப்பைக் குறிப்பிட்டு ஆட்சியாளர்கள் ஆடையணிந்து செல்ல முடியுமா? என எதிர்க்கட்சியினர் விமர்சிக்கிறார்கள். நாங்கள் ஆடையணிந்து செல்வதில் எவ்விதமானப் பிரச்சினையும் இல்லை என்றார்.

நாட்டு மக்கள் எங்களிடம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றே கூறினார்கள். தடுப்பூசி செலுத்தும் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திய நாடுகளின் தரவரிசையில் இலங்கை முன்னிலையில் உள்ளது. எனவே ஆடையணிந்து செல்வதில் பிரச்சினைகள் இல்லை. ஆனால் எமக்கு வாக்களித்தவர்கள் பிரச்சினைகளில் இருக்கிறார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

தவறுகளைத் திருத்தாவிடின்

# அரசாங்கத்துக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்

தவறுகளைத் திருத்திக்கொண்டு அரசாங்கம் பயணிக்க வேண்டும். இல்லையென்றால், நாட்டு மக்கள் பாடம் கற்பிப்பார்கள் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



செய்தியாளரின் கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, அத்தியாவசிய பொருள்களின் விலைகளை வர்த்தகர்கள் நினைத்ததுபோல,அதிகரிக்க இடமளிக்கக்கூடாது. அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பில் அரசாங்கம் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்துக்கு எஞ்சியிருக்கும் இறுதி மூன்று வருடங்களில் அரசாங்கம் நன்கு திட்டமிட்டு செயற்பட வேண்டும். இல்லை என்றால் நாட்டு மக்கள் நிச்சயமாக பாடம் ஒன்றை அரசாங்கத்துக்கு கற்பிப்பார்கள் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

மண் விவகாரத்தை ஆயுதமாக்குகின்றனர்;

# நாய்குட்டி பெயரிலும் மண் பேமிற் இல்லை

■ க.விஜயரெத்தினம், வா.கிருஸ்ணா

நடைபெற இருக்கின்ற மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தங்களது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இவர்கள் பாவிக்கும் ஒரே ஆயுதம் மண் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக மையத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவிக்கும்போது மேலும் கூறியதாவது:

என்னுடைய சகோதரர் சதாசிவம் மயூரனின் பெயரில், மண் அனுமதிப்பத்திரம் இருப்பதாக சாணக்கியன் கூறியிருக்கின்றார். இதனுடைய நோக்கம் சண்முகநாதன் மயூரனுக்கும் சதாசிவம் மயூரனுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஒரு பொய்யான தகவலை வழங்கியிருப்பது என்பது இவருடைய எதிர்கால அரசியலுக்கு இது மிகவும் ஆபத்தாக முடியும் என்றார்.

# அமைச்சர் நாமலின் அம்பாறை விஜயம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா, எஸ்.அஷ்ரப்கான், எம்.என்.எம்.அப்ராஸ், ஏ. எல்.எம்.ஷினாஸ்

சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தை சகல நவீன வசதிகளும் கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் றிஸ்லி மயோன் முஸ்தபாவின் அழைப்பின் பேரில், நேற்று (13) அங்கு விஜயம் செய்த அமைச்சர் நாமல், பயிற்சி நிலைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலிலும் பங்குபற்றியிருந்தார்.

இதன்போது, குறித்த இளைஞர் பயிற்சி நிலையத்தை சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர், அங்குள்ள குறைகள், தேவைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், இப்பயிற்சி நிலையத்தில் நடத்தப்படுகின்ற கற்கை நெறிகள், அவற்றின் பயன்கள், வாய்ப்புகள் தொடர்பில் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இங்குள்ள குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டு, இப்பிராந்திய இளைஞர், யுவதிகள் அனைவரும் நன்மையடையும் வகையில் அனைத்து தொழிற் பயிற்சிகளையும் வழங்கக்கூடியதான ஒரு நவீன தொழிற் பயிற்சிக் கல்லூரியாக இந்நிலையம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற தனது தந்தையார் மயோன் முஸ்தபாவின் எண்ணக்கருவை சாத்தியமாக்க உதவ முன்வர வேண்டும் என றிஸ்லி மயோன் முஸ்தபா இதன்போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

இத்திட்டத்தை வரவேற்ற அமைச்சர் நாமல், முதற்கட்டமாக அனைத்து நவீன வசதிகளும் கொண்டதாக இந்நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



# ஆட்சியாளர்களால் ஆடையணிந்து செல்ல முடியுமா?

அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிக்கச் செய்த ஆட்சியாளர்களால் ஆடையணிந்துகொண்டு செல்ல முடியுமா? என வினவிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், எரிபொருளின் விலைகளும் அதிகரிக்கப்பட உள்ளதாகவும் கூறினார்.



மேலும் தொடர்ந்து கருத்து தெரிவித்த மரிக்கார் எம்.பி; 2014ஆம் ஆண்டும் இவ்வாறே பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. எனினும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் பால்மா, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைத்திருந்தோம். இன்று அல்லது நாளை எரிபொருளின் விலைகளும் அதிகரிக்கப்பட உள்ளன. குறிப்பாக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயாலும், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாயாலும் விலை அதிகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் பட்சத்தில் பஸ் கட்டணங்களும் அதிகரிக்கும். டை,(கழுத்துப்பட்டி) கோர்ட் அணிந்துகொண்டு சென்றவர்கள் எங்கே? அவர்களால் மீண்டும் டை, கோர்ட் அணிந்து செல்ல முடியுமா? அல்லது ஆடை அணிந்து கொண்டு செல்ல முடியுமா எனவும் வினவினார்.

# கட்டுப்பாட்டு விலையை மீறி சீனி விற்பனை

நாட்டில் தற்போது சீனியின் விலை, கட்டுப்பாட்டிலுள்ள நிலையில், அதனை மீறி சில வியாபாரிகள் அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.



வெள்ளை சீனிக்கு 125 ரூபாயாகவும் சிவப்பு சீனிக்கு 128 ரூபாயாகவும் அண்மையில் நுகர்வோர் அதிகார சபை சில்லறை விலையை நிர்ணயித்திருந்தது. எவ்வாறாயினும் குறித்த விலையை விட அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கல்முனை மாநகர சபையின் அ.இ.ம.கா உறுப்பினர்

# பதவி விலக மறுப்பு

■ பி.எம். எம். ஏ. காதர்




கல்முனை மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் பீ.எம். ஷிபான் பதவி விலக மறுப்பதை அடுத்து, பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ள ஏ.எச்.ஏ. ழாஹிர், கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைதீனுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது: '2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில், கல்முனை மாநகர சபைக்கான உறுப்பினர் தெரிவுத் தேர்தலின்போது, கல்முனை மாநகர சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு, தெரிவு மூலம் ஓர் ஆசனத்தையும் பட்டியல் உறுப்பினர்கள் 4 பேரையும் பெற்றுக்கொண்டதை தாங்கள் அறிவீர்கள்.

இதன்படி, மருதமுனை பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற வாக்குகளின் அடிப்படையில் 4 வட்டாரங்களில் போட்டியிட்ட நால்வருக்கும் தலா ஒவ்வொரு வருடம் பட்டியல் ஆசனத்தை வழங்குவது என கட்சியின் தலைமையுடன் உயர்பீடம் தீர்மானித்தது.

அதற்கு அமைவாக முதல் வருடம் ஏ. நெய்னா முஹம்மது, இரண்டாம் வருடம் வை.கே. றஹ்மான் ஆகியோரும் தங்கள் பதவிகளை நிறைவு செய்தனர்.

அதன் பின்னர் பதியேற்ற ஆசிரியர் பீ.எம். ஷிபானின் ஒரு வருட பதவிக்காலம் 2021 ஏப்ரல் மாதம் இறுதி அமர்வுடன் முடிவுற்றது. இது தொடர்பாக தங்கள் பதவியை இராஜினாமா செய்யுமாறு, தாங்கள் பீ.எம். ஷிபானுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தும் இதுவரை பதவியை இராஜினாமா செய்யாது, ஏமாற்றி வருகின்றார். இது எனக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும்.

எனக்கு வாக்களித்த மக்களுக்கு நான் கடமையாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது. அதேபோன்று கட்சியின் தலைமையும் உயர்பீடமும் எடுத்த முடிவை நிராகரிக்க முடியாது.

எனவே, உறுப்பினர் ஷிபான் தனது பதவியை இராஜினாமா செய்து, நான் பதவி ஏற்பதற்கு செயலாளர் நாயகம் என்ற வகையில் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கௌரவிப்பு...





2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய மாணவர்களுக்கு முன் பயிற்சிப் பரீட்சை நடத்தப்பட்டது.
இதில் 7 பரீட்சைகள் நடத்தப்பட்டு, அவற்றில் முதலிடங்களை பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் எம்.எல்.எம். பைசல் தலைமையில் நேற்று (13) நடைபெற்றது. இதன்போது மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

(படப்பிடிப்பு: எச்.எம்.எம். பர்ஸான்)



மக்கள் பிரச்சினைகளை

## ஜனாதிபதி, பிரதமருக்கு ஆயர் தெரியப்படுத்துவார்

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை வண.ஜோசப் பொன்னையா ஆண்டகையை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், ஆயர் இல்லத்தில் நேற்று முன்தினம் (12) சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, 69ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய ஆயருக்கு, சாணக்கியன் எம்.பி பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பல விடயங்கள் தொடர்பிலும் சாணக்கியன் இதன்போது தெளிவுபடுத்தியிருந்தார்.

குறிப்பாக, விவசாயிகள் எதிர்நோக்கும் பசளைப் பிரச்சினை, காணி அபகரிப்பு, சட்டவிரோத குடியேற்றங்கள், மணல் அகழ்வு போன்ற விடயங்களை ஜனாதிபதி, பிரதமர் போன்றோருக்கு பொதுமக்கள் சார்பாகத் தெரியப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை சாணக்கியன் எம்.பி முன்வைத்தார்.


அவரது கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் விரைவாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்குத் தெரியப்படுத்துவதாகவும் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண.ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்திருந்தார்.

## 'இல்லத்து வழக்காடு' நூல் வெளியீடு

■ நூருல் ஹூதா உமர்

பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஓர் அங்கமாக 'இல்லத்து வழக்காடு' எனும் தலைப்பில், வெளியீட்டாளரும் திட்டப்பணிப்பாளருமான ஏ.ஜெ. காமில் இம்டாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தக வெளியீடு, காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (13) நடைபெற்றது .

இந்த நிகழ்வில், காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, புத்தகத்தை வெளியீட்டு வைத்தார்.




மேலும், காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பாத்தீபன், கணக்காளர் ஜயசர்மிகா, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க, காரைதீவு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிட்டா உட்பட மாதர் அமைப்புகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஆசிய நிலையத்தின் அனுசரணையுடன் GAFSO நிறுவனத்தால் பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாமல் செய்யும் வேலைத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்ட விரோத தொழில்முறை

# இந்தியாவுக்கு சொல்வேன்

## அமைச்சர் டக்ளஸிடம் சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாட்டினை புரிந்து கொள்வதாக தெரிவித்த இந்திய மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியம் சுவாமி இதுதொடர்பில் இந்திய அரச தலைவர்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள இந்திய மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (12) சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் போது, இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் விரிவாக



ஆராயப்பட்டது. இதன்போது, எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில் முறைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டின் அவசியம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சுப்பிரமணியம் சுவாமிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது, இந்திய கடற்றொழிலாளர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகளினால் இலங்கையின் வட பகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டு வருகின்ற பாதிப்புக்கள் தன்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக தெரிவித்துள்ள சுப்பிரமணியம் சுவாமி, கடல் வளங்களை அழிக்கின்ற றோலர் தொழில் முறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற தன்னுடைய நிலைப்பாட்டினையும் வெளிப்படுத்தினார்.

மேலும், இவ்விடயம் தொடர்பாக இந்திய மாநிலங்களவையில் உரையாற்றவுள்ளதாகவும், இந்திய தலைவர்களுக்கு தெளிவுபடுத்தி விரைவான தீர்வுக்கு முயற்சிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது, கடற்றொழிலாளர் விவகாரம் மற்றும் இரண்டு நாடுகளும் தொடர்புபட்ட சமகால நிலவரங்கள் தொடர்பாகவும் இரண்டு நாட்டு அரசியல் முக்கியஸ்தர்களும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## திடீரெனத் தீப்பற்றி கருகிய வாகனம்

■ ஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார், அரிப்பு பகுதியில், நேற்று முன்தினம் (12) இரவு வவுனியா நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம், திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இதன் காரணமாக, குறித்த பட்டா ரக வாகனம் முழுமையாக எரிந்துள்ளதோடு, அதில் இருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று முன்தினம் (12) மாலை, வவுனியாவில் இருந்து மன்னார், அரிப்பு பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருட்களை வழங்கி விட்டு, மீண்டும் வவுனியா நோக்கிப் பயணித்த போதே, குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனினும், குறித்த வாகனத்தில் பயணித்த இருவர் எவ்வித காயங்களும் இன்றி தப்பியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை, சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில்

## வெடிபொருட்கள் மீட்பு

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவின் இருவேறு இடங்களில் இருந்து, நேற்று முன்தினம் (12) வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அளம்பில் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் இருந்து, துப்பாக்கி ரவைகள், கனரக துப்பாக்கி ரவைகள், எறிகணைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பில், நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முள்ளியவளை, கேப்பாபிலவு பகுதியில் உள்ள தனியார் காணியில் இருந்து மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

விதை உற்பத்திக்காகவே

## இரசாயன உரம் வழங்கப்பட்டுள்ளது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் இருந்து விதை உற்பத்திக்காகவே, சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு 10 அந்தர் இரசாயன உரம் வழங்கப்பட்டுள்ளதாக, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தேவரதன் தெரிவித்துள்ளார்.

கடந்த போகத்தில் வழங்குவதற்கு களஞ்சியப்படுத்தப்பட்ட உரத்தில், மிகுதியாக இருந்த உரமே, இவ்வாறு வழங்கப்பட்டு உள்ளதாகவும், அவர் கூறினார். இரசாயன உரம் தட்டுப்பாடு காணப்படும் நிலையில், கமநல சேவை நிலையங்களில் மேட்டுநிலச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மானிய உர மூடைகள் அரச திணைக்களங்கள், சிவில் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றுக்கு வழங்கப்படுவதாக, கிளிநொச்சி விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விபத்தால்

## ஓமந்தைப் பகுதிக்கான மின்சாரம் தடை

■ க. அகரன்

வவுனியா ஏ 9 வீதி, மாணிக்கவளவு சந்திப் பகுதியில், நேற்று (13) அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தால், ஓமந்தை பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி சென்ற கன்டர் ரக வாகனம், மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது சாரதிக்கு சிறு காயம் ஏற்பட்டதுடன், வாகனமும் சேதமடைந்தது.

இந்த விபத்தால் மின் கம்பம் உடைந்து வீழ்ந்ததில், ஓமந்தை பகுதியில் உள்ள சில கிராமங்களுக்கான மின்சாரம் அதிகாலை 3 மணியில் இருந்து தடைப்பட்டிருந்தது.



இதேவேளை, வவுனியா - மன்னார் பிரதான வீதியில், நேற்று முன்தினம் (12) மாலை 6.40 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரவிகரன், சிவாஜிலிங்கம் மீதான

## வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

■ சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன்

2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில், மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா



ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணை, பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தால், நேற்று முன்தினம் (12), குறித்த வழக்கு விசாரணைகள் எடுத்துக்கொள்ளப்படாத நிலையில், ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணைகள், கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பத்தொன்பது தொழிலாளர்கள்

# குளவிக்கொட்டுக்கு இலக்காகினர்

■ ரஞ்சித் ராஜபக்ஸ, எம். கிருஸ்ணா

நோர்வூட், ஸ்டொக்கம் தோட்டத்தில், கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 15 தொழிலாளர்கள் நேற்று (13) காலை குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்கான 19 பேரும் டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஐவர் மாத்திரம் தொடர்ந்து தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தேயிலை மலையிலிருந்த மரத்தில் கட்டப்பட்டிருந்த குளவிக் கூட்டை கழுகொன்று கலைத்ததன் காரணமாக, குளவிகள் கலைந்து, தொழிலாளர்களை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சரை விமர்சிப்பது

# ஜீவனின் நோக்கம் அல்ல!

## ராஜமணி பிரசாந்த் தெரிவிப்பு.

■ நீலமேகம் பிரசாந்த்

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தையோ மலையக வீடமைப்புக்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சரையோ விமர்சிப்பது இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நோக்கம் கிடையாது என, கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (12) பிரதேச சபையில் நடைபெற்ற மாதாந்த அமர்வின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர்,

அமரர் ஆறுமுகன் தொண்டமானால் கொண்டு வரப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்டத்தின் ஊடாக, பயனாளிகளுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதே அவரது விருப்பம் என்றார்.

இந்திய வீடமைப்புத் திட்டம் 2012 ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் காலத்தில், சோனியா காந்தி ஊடாக ஆறுமுகன் தொண்டமானால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் 4,000 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஆட்சி மாற்றம் காரணமாக பல வீடுகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன.

அவற்றுக்கு மின்சாரம், குடிநீர், பாதை அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து புனரமைப்பதற்காக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் 526 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.



அதேநேரம், நல்லாட்சி அரசாங்கத்தையோ, மலையக வீடமைப்புக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சரையோ யாரும் விமர்சனம் செய்யக் கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளார். அமரர் ஆறுமுகன் தொண்டமானால் உருவாக்கப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்டம் உரிய முறையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதே ஜீவன் தொண்டமானின் நோக்கமாகும் என்றார்.



எல்ல நகரில் சுகாதார வசதிகளை

# மேம்படுத்த நடவடிக்கை

■ சுமணசிறி குணதிலக

எல்ல பிரதேச சபைக்குரிய எல்ல நகரின் சுகாதார வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எல்ல நகரில் பொதுக் கழிப்பிட கட்டமைப்பை அமைப்பது தொடர்பில் நேற்று முன்தினம் (12) ஊவா மாகாண ஆளுநர் தலைமையில், கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பொதுக் கழிப்பிடத்தை அமைப்பதற்கான இடம் தொடர்பான பிரச்சினை குறித்து, எல்ல பிரதேச சபையின் தவிசாளர் பி.எம். உதயஜீவ பண்டாரவால் முன்வைக்கப்பட்டது.

கொரோனா தொற்றின் வேகம் குறைவடைந்துள்ளதுடன் நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும். எனவே, சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்த எல்ல நகரின் சுகாதார வசதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளுநர் முஸம்மில் அறிவுரை வழங்கியுள்ளார்.





# உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

அக்கரப்பத்தனை, டொரின்டன் தோட்டத்தில் வாழ்வாதாரத்தை இழந்து, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 100 குடும்பங்களுக்கு, கணினி பொறியியலாளர் ராகுல் ராஜ், வைத்தியர் ஆவணியா ஆகியோரின் அனுசரணையுடன், 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த உலர் உணவு பொருட்களை பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் வழங்கி வைத்தார். (பி. கேதீஸ்)

# "பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்தவும்"

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

குழம்பியுள்ள குட்டையில் மீன் பிடிப்பதைப் போல, தனியார் நிறுவனங்களும் தன்னிச்சையாக பொருட்களின் விலையை அதிகரித்துக்கொண்டே செல்கிறார்கள். இதன் விளைவாக, நடுத்தர லாபம் ஈட்டக்கூடிய மக்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி இருக்கிறது.

காலநிலை மாற்றம், பொருட்களின் விலை ஏற்றம், வெளியாட்கள் மூலம் பெருந்தோட்ட நிலங்கள் அபகரிப்பு என இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு மலையக மக்கள் தொடர்ந்து முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய செயற்பாடுகளை அரசாங்கமும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும். மலையக மக்களின் இருப்பு, அதிகரித்து வருகின்ற அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் தொடர்பாக, பாராளுமன்றத்தில் இரண்டு தினங்களுக்கு விவாதங்களை மேற்கொள்ளுமாறு சபாநாயகருக்கு, மின்னஞ்சல் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

லிந்துலையில் சேதன பசளை

# தயாரிப்பு தொடர்பான செயலமர்வு

■ பா.பாலேந்திரன்

நுவரெலியா மாவட்டத்தில் சேதன பசளை தயாரிப்பை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் நோக்கிலான, செயன்முறை பயிற்சி திட்டம் ஒன்று லிந்துலை டியணிலகல மாதிரி பால் பண்ணையில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

விவசாய அமைச்சின் மேற்பார்வையில், காலநிலைக்கு சீரான விவசாய செய்கை திட்டத்தின் கீழ், சேதனப்பசளை தயாரித்தல், இயற்கை விவசாயம் தொடர்பிலான தெளிவூட்டலும் வழங்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில், ராணிவத்தை, இல்டன்னோல், நாகசேனை, வோல்டீம் பகுதிகளில் உள்ளவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், நுவரெலியா மாவட்டத்தில் இயற்கை விவசாயம், சேதன பசளை தயாரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சிகளைப் பெற விருப்பமுள்ளவர்கள், தங்கள் பகுதி விவசாய போதனாசிரியர்கள் ஊடாக விண்ணப்பித்தால், அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்க் தயாராக இருப்பதாக வருகை தந்த விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.



அடையாள அட்டையைக் காண்பித்தாலே

# அரை கிலோகிராம் தேயிலைத்தூள்

■ நடராஜா மலர்வேந்தன்

அடையாள அட்டையைக் காண்பித்தால் மாத்திரமே, அரை கிலோகிராம் தேயிலைத்தூளைப் பெற்றுக்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை பெருந்தோட்டங்களில் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவமானது பதுளை, கோணக்கலை மேற்பிரிவு தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

பெண்ணொருவர், 37 வருடங்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்து, 60 வயதில் ஓய்வு பெற்றுள்ள நிலையில், மாதாந்தம் வழங்கப்படும் அரை கிலோகிராம் தேயிலைத் தூளைப் பெறுவதற்கு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு தோட்ட நிர்வாக உத்தியோகஸ்தரால் கோரப்பட்டுள்ளது.

# தம்பியைக் கொன்ற அண்ணன் கைது

■ மஹேஸ் கீர்த்திரத்ன

குடும்பத் தகராறு காரணமாக, உடன்பிறந்த தம்பியை, மூத்த சகோதரர் ஒருவர், கத்தியால் குத்தி கொலை செய்த சம்பவம் மாத்தளை, களுதாவளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (12) இரவு பதிவாகியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் களுதாவளை, திக்கிரியவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான ஸ்டூவன் ராஜ் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இக்கொலையுடன் தொடர்புடைய மூத்த சகோதரனும் மாத்தளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனுக்கு இம்மாதம் 21ஆம் திகதி திருமணம் நடைபெறவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாத்தளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ஹட்டனில் முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன

■ சுதத்.எச்.எம்.ஹேவா

கொரோனா தொற்றால் பல மாதங்களாக மூட்டப்பட்டிருந்த ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்குட்பட்ட முன்பள்ளிகள், சுகாதார வழிகாட்டலின் கீழ் நேற்றிலிருந்து (13) ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்பள்ளி சிறார்களை பகுதி பகுதியாகப் பிரித்து, சுகாதார ஆலோசனைகளின் கீழ், மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களுடன் முன்பள்ளி கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக குறித்த முன்பள்ளிகளின் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

# கடைக்குள் நுழைந்த லொறி

மாத்தளையிலிருந்து தம்புள்ளைக்கு பயணித்த லொறியொன்று விபத்துக்குள்ளாகி, ஏ9 வீதியிலுள்ள வர்த்தக நிலையத்துக்குள் நுழைந்ததாகவும், இதன்போது வர்த்தக நிலையம் மூடப்பட்டிருந்தமையால், எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் நாவுல பொலிஸார் தெரிவித்தனர். (இந்திக அருணகுமார)



# மண்ணெண்ணெயில் 'கை'யை வைக்காது மாற்றுவழியைத் தேடுங்கள்

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை, ஒரேதடவையில் ஆயிரக்கணக்கில் அதிகரித்த அரசாங்கத்தின் பொருளாதார மேம்பாட்டு கொள்கையால் மக்கள் பெரும் சுமையைச் சுமக்கின்றனர். ஆனாலும், மாற்றுவழிகளையும் மக்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்பதையிட்டு ஓரளவுக்கு சந்தோஷமடைய வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களில், காஸ் பிரதானமானது. பெருநகரங்களிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் காஸ் அடுப்பு இல்லாத சமையலறைகளே இருக்காது. இலகுவானது மட்டுமன்றி, குறுகிய நேரத்தில் சமைத்து முடித்துவிடமுடியும்.

ஹோட்டல்களிலும் காஸ் அடுப்புகளே பயன்படுத்தப்படுகின்றன. காஸ் விலை அதிகரிப்பை அடுத்து, ஒரு சாப்பாட்டின் கொள்ளளவு குறைந்துவிட்டது. சில ஹோட்டல்களில், சுடுநீர் தருவதை மிக இலாவகமாகத் தவிர்த்துவிட்டனர். சில இடங்களில், சகல உணவுப் பொருட்களின் விலைகளையும் ஏற்றி, மக்களின் வயிற்றைச் சுருங்கச் செய்துவிட்டனர்.

எனினும், மாற்று வழியை நாடியிருக்கும் மக்கள், விறகைப் பயன்படுத்துவதற்கான ஆர்வத்தை அதிகரித்துகொண்டுள்ளனர். இன்னும் சிலர், காஸ் அடுப்பையும் விறகு அடுப்பையும் மாறிமாறிப் பயன்படுத்துவதற்கு ஆரம்பித்துவிட்டனர். நகரங்களுக்கு அப்பால், கிராமங்களிலும் பெருந்தோட்டங்களிலும் விறகு அடுப்பை மட்டுமே பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

பெருநகரங்களில், மண்ணெண்ணை அடுப்பை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பதற்கிணங்க, மண்ணெண்ணை அடுப்புகளை விற்பனை செய்யும் சில வர்த்தகர்கள், காஸ் விலை எவ்வளவுக்கு அதிகரிக்கப்பட்டதோ, அதேதொகையை மண்ணெண்ணை அடுப்புக்கும் அதிகரித்துவிட்டனர்.

விட்டதையெல்லாம் ஒரே தடவையில் பிடிப்பதைப் போல, அடுப்புகளின் விலைகளையும் கூட்டி, மக்கள் மீது இன்னுமின்னும் சுமையைச் சுமத்திவிட்டனர். கொரோனா வைரஸ் தொற்றால், ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். மண்ணெண்ணை அடுப்பைப் பயன்படுத்தும் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்வோரின் நிலைமையும் பெரும் திண்டாட்டம்தான்.

அரசாங்கத்தின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தால், காஸ் விலை கூடியது. மண்ணெண்ணை அடுப்புகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மண்ணெண்ணை பயன்பாடும் வெகுவாக அதிகரிக்கும். ஆகையால், மண்ணெண்ணை இறக்குமதியை அதிகரிப்பது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

மண்ணெண்ணை பயன்பாடு அதிகரித்துவிட்டதால், அதன் விலையை அதிகரித்து, மக்களின் வயிற்றை இன்னும் எரிக்கக்கூடாது என்பதே, எமது எதிர்பார்ப்பாகும். அதேபோல, ஏனைய எரிபொருட்களின் விலைகளை அதிகாரிக்காமல், மாற்று வழிகளைக் கையாள வேண்டும். எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்குமாயின், போக்குவரத்து செலவு என்னும் பொறியை வைத்து, அத்தனை பொருட்களின் விலைகளையும் அதிகரித்துவிடுவர். அதுமட்டுமன்றி, விற்பனை செய்யப்படும் பொருட்களின் தரம், கொள்ளளவு தொடர்பில் தேடிபார்க்க வேண்டியது நுகர்வோர் அதிகார சபையின் பொறுப்பாகும்.

சம்பள அதிகரிப்பு இல்லை; மேலதிக கொடுப்பனவுகளும் இல்லை என்பதால், விலை அதிகரிப்பு சூத்திரத்தை தூக்கியெறிந்து விட்டு, மாற்றுவழியைத் தேடுவதே காலத்தின் தேவையாகும் என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

பிரபஞ்சத்தின் ஊடாக, உயிர்கள் உருவாகின. எங்கள் புலன்களுக்குத் தெரியாத, மகாசக்தியான இறைவனால் இவை உருவாகின. இதைப் படைப்பு என்கின்றோம்.

எனவே, உயிரினங்களைப் படைத்த இறைவனுக்கே, அவற்றைக் காத்து அருளும் உரிமை உண்டு. எனவே கடவுள் எங்களைக் காப்பாற்றி, உன்னதமான நிலைக்கு இட்டுவிடுவார் என நம்பிக்கை கொள்வோமாக!

கடவுளை வழிபாடு செய்யும் மக்கள் மனக்கிலேசம் அடையலாகாது. மகாசக்தியை உள்ளன்புடன் பக்திமூலம் வெளிப்படுத்தினால், புத்துணர்வு கிடைத்தே தீரும். அநேகர் கடவுளுடன் பேரம் பேசுகிறார்கள்.

"எங்களுக்கு வேண்டியதைத் தாருங்கள்; நாங்கள் தரும காரியங்களை, அப்போதுதான் செய்வோம்" என்கின்றனர். சமானியர்களைப் போல், இறைவனிடம் பேரம் பேசலாகாது.

பக்திக்கு ஏது எல்லை? உயிர்களை நேசித்தாலே போதும்! நிம்மதி தானாகச் சுரக்கும். உண்மையாக வாழ்ந்தாலே எல்லாம் கிட்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மாகாண சபைத் தேர்தலுக்காக காத்திருக்கும் தமிழ்க் கட்சிகள்



புருஜோத்தமன் தங்கமயில்

கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த மாகாண சபைகளுக்கான தேர்தல், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடியால், அரசியல்வாதிகள் முடங்கியிருந்த நிலையில், மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு, அவர்களை உற்சாகமடைய வைத்திருக்கின்றது.

முதலமைச்சர் கனவோடும் அமைச்சர் கனவுகளோடும் பலரும் பல மாதங்களாகக் காத்திருக்கிறார்கள். அதிலும், பாராளுமன்றத் தேர்தலில் தோற்றவர்களின் பதவிக்கான காத்திருப்பு என்பது, சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அரசியல் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்குமான வித்தியாசம் என்பது பதவி, பகட்டுச் சார்ந்தது. மக்களுக்கான உண்மையான அரசியல் தலைவர்களுக்கு பதவியும் பட்டமும் முக்கியமல்ல. அவர்கள், தேர்தலில் வென்றாலும் தோற்றாலும், மக்களுக்காகத் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால், அரசியல்வாதிகளைப் பொறுத்தளவில், அவர்களால் பதவி, பகட்டு இன்றி வாழவே முடியாது. தேர்தல் வெற்றிகளுக்காக எல்லாவிதமான தந்திரங்களையும் அரங்கேற்றத் துணிவார்கள்.

இப்படியானவர்களால் தமிழ் அரசியல் பரப்பும், கடந்த பத்து ஆண்டுகளில் நிரப்பப்பட்டுவிட்டது. பதவி, பகட்டை எதிர்பார்த்து, அரசியல் கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் நெருங்குபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது.

மக்களுக்கான அரசியல் என்பது, மக்களின் எண்ணங்களை, அவர்களின் ஆழ்மனதில் இருந்து பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ் அரசியல் சூழலில், அவ்வாறான நிலை பெரும்பாலும் இல்லை. அநேகமானவர்களின் அரசியல் அரங்காற்றுகைகள், தேர்தல்களைக் குறிவைத்து நிகழ்த்தப்படுகின்றன.

ஒத்திவைக்கப்பட்டு வந்த மாகாண சபைத் தேர்தல்களுக்காக, அதிகமான முக்கியத்துவத்துடன் காத்திருந்த தரப்பினர் என்றால், தமிழ்த் தேசிய கட்சிகளைச் சொல்ல முடியும். தென் இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகள் கூட, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில், பெரிய கரிசனையை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

ஆனால், மாகாண சபை முறையைத் தொடர்ச்சியாக நிராகரித்து வந்திருக்கின்ற தமிழ்த் தேசிய கட்சிகள், அந்த நிர்வாகக் கட்டமைப்புக்கான தேர்தலுக்காக, அதிக முக்கியத்துவத்துடன் காத்திருக்கின்றன. இது, அடிப்படையில் முரண்நகை. இந்த முரணுக்குள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும், எந்தவித பாகுபாடுமின்றி இருக்கின்றன.

கடந்த காலங்களில், இந்தியாவையும் 13ஆவது திருத்தத்தையும் எதிர்த்துவந்த முன்னணியினர், அந்த நிலையிலிருந்து மாறிவிட்டனர். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது என்பது, 13ஆவது திருத்தச் சட்டத்தையும் மாகாண சபை முறைமையையும் அங்கிகரிக்கும் செயல் என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறி வந்திருக்கின்றது. 2013ஆம் ஆண்டு, வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் மேற்கண்ட விடயத்தைக் கூறியே, தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டது.

ஆனால், சில ஆண்டுகளிலேயே முன்னணியிடம் மனமாற்றம் ஏற்பட்டு விட்டது. மாகாண சபைத் தேர்தலுக்காக, முன்னணியின் முக்கியஸ்தர்கள் தயாராகத் தொடங்கிவிட்டார்கள். முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தொடங்கி, அந்தக் கட்சியின் உறுப்பினர்களிடத்திலேயே கூட, இந்தியாவுடனான அணுகுமுறை மாறிவிட்டது. அண்மையில், யாழ்ப்பாணம் வந்த இந்திய வெளியுறவு செயலாளர், கூட்டமைப்பு தவிர்ந்த தமிழ்க் கட்சிகள், அரசியல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட குழுவினருக்கு இரவு விருந்தளித்தார்.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த கஜேந்திரகுமாரின் உடல்மொழி, பல செய்திகளை அப்பட்டமாகச் சொல்லியது. கடந்த காலங்களில், ஊடக மையத்திலும் தேர்தல் மேடைகளிலும், இந்தியா தொடர்பில் அவர் முழங்கி வந்திருக்கின்ற கருத்துகள் எல்லாமும் பொய்யானவையோ என்று தோன்றுமளவுக்கு இருந்தன.

ஏற்கெனவே, முன்னணியில் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தரப்புக்கும் கஜேந்திரகுமார் தரப்பினருக்குமான முரண்பாடுகள் பெரியளவில் சென்றுவிட்டன. கஜேந்திரகுமாரின் அழுத்தங்களைத் தாண்டி, மணிவண்ணன் தரப்பினர் யாழ்ப்பாணம் மாநகர சபையையும் நல்லூர் பிரதேச சபையையும் வெற்றி கொண்டுவிட்டார்கள். இதனால், முன்னணியின் உண்மையான உரித்தாளர்கள் யார் என்கிற கேள்வி இன்னமும் தொக்கி நிற்கின்றது.

அப்படியான நிலையில், முன்னணியின் அடையாளத்தைப் பேணுவதற்கு மாகாண சபைத் தேர்தலில், தன்னுடைய அணியினரை அகில இலங்கை காங்கிரஸின் 'சைக்கிள்' சின்னத்தில் போட்டியிட வைத்து, வெற்றிபெற வைக்க வேண்டும் என்கிற தன்முனைப்பு, கஜேந்திரகுமாருக்கு ஏற்பட்டுவிட்டது.

மாகாண சபைத் தேர்தலில் ஒரு சில உறுப்பினர்களையாவது வெற்றிவெற வைத்தால், முன்னணி உண்மையிலேயே தன்னுடனேயே இருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம் என்பது அவரது நிலைப்பாடு. இல்லையென்றால், முரண்பாடுகளுக்குப் பின்னராக, மணிவண்ணன் அணி பெற்றிருக்கின்ற முக்கியத்துவம் இன்னமும் அதிகரித்து, முன்னணியின் உரித்துச் சார்ந்த பிரச்சினைகள், எதிர்காலத்தில் இன்னும் பலமாக எழுவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

கூட்டமைப்பைப் பொறுத்தளவில், பாராளுமன்றத் தேர்தலில் பதவி இழந்தவர்களும், ஏற்கெனவே மாகாண சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்களுமே, மாகாண சபைத் தேர்தலுக்காகக் காத்திருக்கின்றார்கள்.

இவர்களின் அநேகருக்கு, மாகாண சபையின் நிர்வாகக் கட்டமைப்பின் அதிகார அளவுகள் குறித்துக்கூட, எந்தத் தெளிவும் இல்லை. பெரும்பாலானவர்கள், மாகாண சபைத் தேர்தலை, பதவிகளுக்கான ஒரு கருவியாக மாத்திரமே காண்கின்றார்கள்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது ஆட்சியைப் பிடித்தவர்கள் என்கிற ரீதியில், ஒன்பது மாகாண சபைகளிலும், இறுதி இடத்தையே பெற்றுக் கொள்ளும் அளவுக்கு மிகமிகக் குழப்பகரமாக மாகாண சபையை நடத்தியவர்கள் கூட்டமைப்பினர்.

கொழும்பிலிருந்து முதலமைச்சர் வேட்பாளராக அழைத்துவரப்பட்ட சி.வி. விக்னேஸ்வரன், தனக்கான பணி என்னவோ அதைச் செய்வதைத் தவிர்ந்து, மற்ற அனைத்து வேலைகளையும், முதலமைச்சர் என்கிற பதவி பிம்பத்தோடு செய்தார். தமிழ் மக்கள் பேரவையும் அவரின் புதிய கட்சியும் அப்படி உருவானவைதான்.

விக்னேஸ்வரன்தான் தன்னுடைய தனிப்பட்ட அரசியலைச் செய்கின்றார் என்றால், அவரைத் தவிர்த்து கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களைச் சரியான புள்ளியில் ஒருங்கிணைத்து, மாகாண சபையை கூட்டமைப்பின் தலைமை நடத்தியதா என்றால், அதுவும் இல்லை. மாகாண சபைக்குள் குழப்பங்கள் ஏற்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இரா.சம்பந்தன், சரியான முடிவுகளை எடுக்கவேண்டிய பல தருணங்களிலும், கடிதங்களை எழுதி விடயங்களைச் சமாளிக்கவே முயன்றார்.

அப்படி மாகாண சபையை, முழுவதுமாகத் தோற்கடித்தவர்களின் தரப்பினரான கூட்டமைப்பினர், இன்றைக்கு மீண்டும் மாகாண சபைக் கனவுகளோடு இருக்கின்றார்கள். குறிப்பாக, பாராளுமன்றத் தேர்தலில் மோசமான தோல்வியைத் தழுவிய மாவை சேனாதிராஜாவும் அவரோடு தோற்றுப் போனவர்களும், தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தக்க வைப்பதற்காக, மாகாண சபைத் தேர்தலை குறிவைக்கின்றார்கள்.

ஏற்கெனவே பாராளுமன்றத் தேர்தலில், இளைஞர்களுக்கான வாய்ப்புகளை மறுத்தவர்கள், தற்போது மாகாண சபைத் தேர்தலிலும் அதையே செய்ய எத்தனிக்கிறார்கள். ஆற்றலும் ஆளுமையும் உள்ள இளம்தலைமுறையை, செயற்பாட்டு அரசியலுக்கு அழைத்துவந்து, அவர்களிடம் பொறுப்புகளை வழங்க வேண்டும் என்கிற எந்தவித எண்ணமும், கூட்டமைப்பின் தலைவர்களிடம் இல்லை. சுயநலம் மட்டுமே வாழ்வாகப் போய்விட்ட நிலைக்கு, கூட்டமைப்பு எனும் கட்டமைப்பைக் கொண்டு வந்து சேர்ந்துவிட்டார்கள். அப்படிப்பட்டவர்களின் எதிர்பார்ப்பே, மாகாண சபைத் தேர்தல் என்றாகிவிட்டது.

கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தளவில், அங்கு மீண்டும் முதலமைச்சராகிவிடலாம் என்கிற கனவோடு பிள்ளையான் இருக்கிறார். ராஜபக்ஷர்களின் அனுசரணை, அவருக்கு இருக்கவே செய்கின்றது. ஏற்கெனவே, எதிர்க்கட்சியில் இருந்தாலும், முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் முக்கியஸ்தர்களும் ராஜபக்ஷர்களின் விசுவாசிகளாக வலம் வரும் நிலையில், அவர்களின் ஆதரவையும் வைத்து, கிழக்கு மாகாண சபையில் பிள்ளையானை அமர்த்தும் வாய்புகளை, ராஜபக்ஷர்கள் புறந்தள்ள மாட்டார்கள்.

அங்கு, தமிழ்த் தேசிய கட்சிகள் வேண்டுமென்றால், எதிர்க்கட்சி எனும் நிலையை அடையும் அளவுக்கான பலத்துடன் மாத்திரமே இருக்கின்றன. அப்படியான நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள், ஆட்சியமைக்கக் கூடிய ஒரே மாகாண சபையாக, வடக்கு மாகாண சபை இருக்கின்றது. அதனை, மீண்டும் கைப்பற்றும் போது, குறைந்தபட்ச அர்ப்பணிப்போடாவது நடத்திச் செல்ல வேண்டும். இல்லையென்றால், எதற்கும் தமிழர்கள் தகுதியற்றவர்கள் என்கிற எண்ணம், அனைத்து இடங்களிலும் பரவிவிடும். அது, எதிர்காலத்தை இன்னும் மோசமாகச் சிதைத்துவிடும்.

## கடிதங்கள்

### பொது நூலகத்தை புனரமைக்குமாறு வேண்டுகோள்

வாசிகசாலை மூலம், மனித மனங்கள் பண்படுத்தப்பட்டு, மனிதனுடைய விலங்குத் தன்மைகள் மெல்ல மெல்ல அழிந்து, மானுடன் என்கின்ற உயர்ந்த தன்மையை, மனிதன் அடைகின்றான்.

ஆலையடிவேம்பு பிரதேச உள்ளூராட்சி பிரிவின் கீழ்வரும் பனங்காடு பொது நூலகம், கடந்த 10 வருடகாலமாக இயங்காமல் காணப்படுகின்றது. வசதியான கட்டடத்தில், பல பெறுமதியான புத்தகங்களுடன் இயங்கிவந்த இவ் வாசிகசாலை, கடந்துபோன அசாதார சூழ்நிலையால் இயங்காமல் போய்விட்டது.

பாடசாலைகள், மாணவர்களை ஏதோவொரு தொழிலைப் பெறும் அளவுக்கு மாத்திரம் தான் கொண்டு செல்லும். தேடிக்கற்றல், அனுபவஅறிவு என்பவற்றின் மூலம், வேலை செய்வதற்குரிய திறனை அவர்களாகவே பெற்றுக்கொள்ள வேண்டும். அறிவுக்கு அடுத்தபடியாக மனப்பாங்கு உள்ளது. இது சிறப்புற வளருமானால், இளைஞர்கள் திசைமாறிச் செல்லாமல் நேரத்தைப் பயனுடையதாக மாற்றுவர். பலவித குற்றச்செயல்களுக்கான சந்தர்ப்பங்கள் இல்லாதொழிகின்றன. எனவே, சிறந்த மனப்பாங்கையும் அறிவையும் வளர்க்கின்ற இடமாக வாசிகசாலைகள் அமைகின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரிகள், சமூகத்தில் அறிவும் விவேகமும் கொண்ட இளைஞர் கட்டமைப்பை உருவாக்க, இந்த வாசிகசாலையை இயங்கச் செய்து, உதவ முன்வரவேண்டுமென, இப்பகுதிவாழ் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இ. நடராஜன்



நாகர்கோவில்

# மனைவியை கொன்ற கணவனுக்கு இரட்டை ஆயுள் தண்டனை



பாம்பைக் கடிக்க வைத்து,மனைவியை கொன்ற வழக்கில் கணவனுக்கு 17 ஆண்டு கடுங்காவல் மற்றும் இரட்டை ஆயுள் தண்டனை வழங்கி கொல்லம் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. இதேவேளை, ரூ.5 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் அஞ்சல் பகுதியை சேர்ந்த மனைவியை கணவன் விசித்திரமான முறையில் கொலை செய்துள்ளான். கடந்த 2020ஆம் ஆண்டு மே 7ஆம் திகதி தாய் வீட்டில் தூங்கி கொண்டிருந்த மனைவி, பாம்பு கடித்து இறந்துள்ளார். உறவினர்களுக்கு இந்த மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, பொலிஸில் புகார் செய்யப்பட்டது. கணவனிடம் பொலிஸார் விசாரித்த போது உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. இதை தொடர்ந்து கணவனுக்கு பாம்பு வழங்கிய சுரேஷ் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் ஆஜரான சுரேஷ், மனநலம் பாதிக்கப்பட்ட மனைவியை கொல்ல வேண்டும் என்று கூறி கணவனுக்கு பாம்பை வாங்கியதாக வாக்குமூலம் கொடுத்தார். பாம்பு வேகமாக கடிப்பதற்காக அதை ஏழு நாள் பட்டினி போட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கையுடன் ஆஜர்படுத்தப்பட்டனர். இதனையடுத்து நீதிபதி மேற்படி தீர்ப்பளித்தார்.

## பள்ளத்திலுள்ள பாறையில் கார் மோதி இருவர் பலி



கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி அருகே காரொன்று பள்ளத்தில் இறங்கி, பாறையில் மோதியதில் 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்து அரவக்குறிச்சி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரை சேர்ந்த ரியல் எஸ்டேட் அதிபரும் மற்றுமொருவரும் காரில் நேற்று முன்தினம் (12) மாலை திண்டுக்கல் சென்றுள்ளனர்.

கரூர், திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில அரவக்குறிச்சி அருகேயுள்ள பொன்னாகவுண்டனூர் பிரிவு சாலை அருகே செல்லும்போது, கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் இடதுபுற பள்ளத்தில் இறங்கி, பாறையில் மோதியது. இதில் சென்ற இருவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். காயமடைந்தவர் கரூர் தனியார் மருத்துமவனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சென்னை



## “ஆணவக் கொலைகள் நடக்கின்றன”

தமிழக ஆளுநர் ரவியை, கிண்டியில் உள்ள ராஜ்பவனில், தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் (12) மாலை சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களுக்கு அண்ணமாலை அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதானது: தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு அடைந்துள்ளது. ஆணவக் கொலைகள் நடந்து வருகின்றன. திருநெல்வேலி தி.மு.க எம்.பி, பா.ஜ.க தொண்டரை அடித்தது மட்டும் அல்லாமல், பொது மக்கள் முன்னிலையில் கண்காணிப்பு கேமராக்களை பறித்துச் சென்றிருக்கிறார். கடலூர் தி.மு.க எம்.பி நிறுவனத்தில் பணிபுரிந்த ஊழியர் அடித்து கொலை செய்யப்பட்ட வழக்கில், எம்.பியும் அவரின் உதவியாரும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளனர்.

**“ திருநெல்வேலி தி.மு.க எம்.பி, பா.ஜ.க தொண்டரை அடித்தது மட்டும் அல்லாமல், கண்காணிப்பு கெமராக்களை பறித்துச் சென்றிருக்கிறார். கடலூர் தி.மு.க எம்.பி நிறுவனத்தில் பணிபுரிந்த ஊழியர் அடித்து கொலை செய்யப்பட்ட வழக்கில், எம்.பியும் அவரின் உதவியாரும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளனர்**

தி.மு.கவை சேர்ந்த கடலூர், திருநெல்வேலி எம்.பிக்கள் மீது நியாயமான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அதை ஆளுநர் கண்காணிக்க வேண்டும் என்றும், ஆளுநரிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. நில ஆக்கிரமிப்பு, சுரங்க கொள்ளை என தற்போதே அராஜகம் தலைதூக்குகிறது. அவற்றை ஆரம்பத்திலேயே சரிசெய்ய வேண்டும் என்று ஆளுநரை சந்தித்து முறையிட்டு உள்ளோம் என்றார்.

திருநெல்வேலி

## தந்தை, மகன் அடுத்தடுத்து கொலையால் பதற்றம்



பாளையங்கோட்டை அருகே அடுத்தடுத்து தந்தை, மகன் கொலை செய்யப்பட்ட சம்பவங்களால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாளையங்கோட்டை அருகே கிருஷ்ணாபுரம், ஜெகஜோதி நகரைச் சேர்ந்த, மீன் வியாபாரிக்கும் இவரது மகனுக்கும் ஸ்ரீவைகுண்டம் கால்வாயைச் சேர்ந்த சிவன் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதனால், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கணவரை பிரிந்து சிவனுடன் மனைவி சென்றுவிட்டார். இருவரும் கன்னியாகுமரியில் குடியிருந்து வந்தனர். இவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அதன் பின்பு வீட்டில் இருந்து வெளியே சென்ற மீன் வியாபாரி திரும்பி வரவில்லை. அங்குள்ள கல்வெட்டான்குழியில் மர்மமான முறையில் அவர் இறந்து கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. சிவந்திப்பட்டி பொலிஸார் அங்கு சென்று உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், நேற்று அதிகாலையில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவரை, மர்ம நபர்கள் அரிவாளால் வெட்டிக்கொலை செய்துவிட்டு தப்பி ஓடி விட்டனர். சம்பவ இடத்தில் திருநெல்வேலி பொலிஸார் விசாரணை மேற்கொண்டார்.

இக்கொலை தொடர்பாக செய்துங்கநல்லூர் பொலிஸில் சிவன் உள்ளிட்ட இருவர் நேற்று சரணடைந்தனர். அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். தந்தை, மகன் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டதால் கிருஷ்ணாபுரம் பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

புதுடெல்லி

அமைச்சர் அஜய் மிஸ்ராவை

## பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதிடம் கோரிக்கை



லக்கிம்பூர் வன்முறை தொடர்பாக, மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனக் கோரி, ராகுல், பிரியங்கா உட்பட காங்கிரஸ் தலைவர்கள் குழு நேற்று (13) ஜனாதிபதி ராம்நாத் கோவிந்திடம் கோரிக்கை முன்வைத்தனர்.


உத்தர பிரதேசத்தின் லக்கிம்பூர் கேரியில் சமீபத்தில் நடந்த கலவரத்தில், நான்கு விவசாயிகள் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா மகன் ஆஷிஷ் மிஸ்ரா கைதாகி உள்ளார். கலவரத்துக்கு பொறுப்பேற்று, அமைச்சர் பதவியை அஜய் மிஸ்ரா இராஜினாமா செய்ய வேண்டும் என எதிர்க்கட்சியான காங்கிரஸ் கூறி உள்ளது. இந்த வன்முறை தொடர்பாக, காங்கிரஸ் கட்சியின் ஏழு பேர் கொண்ட குழு, நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து மனு அளித்தனர்.

காங்கிரஸ் எம்.பி. ராகுல், பொதுச் செயலர் பிரியங்கா, ராஜ்யசபா எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, கட்சியின் மூத்த தலைவர்கள் ஏ.கே. அந்தோணி, குலாம்நபி ஆசாத், கே.சி.வேணுகோபால் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

# நவராத்திரி பூஜை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், நவராத்திரி பூஜை, அலரிமாளிகையில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது. இதில், பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன்சுவாமியும் பங்கேற்றார். (படங்கள்: பிரதமர் ஊடகப் பிரிவு)



















மும்பை

## பயங்கரவாதிகளை பழிவாங்க வேண்டும்

### சிவசேனா வலியுறுத்துகிறது



ஜம்மு - காஷ்மீரில் இராணுவத்தினர் ஐந்து பேரைச் சுட்டுக் கொன்ற பயங்கரவாதிகளை பழிவாங்க வேண்டும் என, சிவசேனா வலியுறுத்தியுள்ளது.

சிவசேனா கட்சி பத்திரிகையான ‘சாம்னா’வில் வெளியான தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது: ‘ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் சட்டம் நீக்கப்பட்ட பின், பாகிஸ்தான் ஆதரவாளர்கள் துணிச்சலான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். பல மதங்களைச் சேர்ந்தவர்கள் காஷ்மீருக்குள் நுழைய அஞ்சும் சூழலை பயங்கரவாதிகள் உருவாக்க முயற்சிக்கின்றனர்.

சமீபத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களில் பள்ளி ஆசிரியர், காஷ்மீர் பண்டிட் உள்ளிட்ட பலர் இறந்துள்ளனர். இது, 1990ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான பண்டிட்டுகளை வலுக்கட்டாயமாக காஷ்மீரில் இருந்து வெளியேற்றிய சூழலை நினைவூட்டுகிறது. சமீபத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் ஐந்து பேர் இறந்துள்ளனர்.

இராணுவத்தினர் சிந்திய இரத்தம் காய்வதற்குள், ஐந்துக்கு, ஐந்து மடங்கு பயங்கரவாதிகளை பழி தீர்க்க வேண்டும். அப்போது தான் இந்தியர்களின் மனம் அமைதி அடையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இராணுவத்தினர் பலியானதை கண்டித்து காஷ்மீரில், சிவசேனா மற்றும் டோக்ரா முன்னணியினர், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உருவப்பொம்மையை எரித்தனர்.

பிலிப்பைன்ஸ்



# கோரப் புயல்; 11 பேர் உயிரிழப்பு



பிலிப்பைன்ஸில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய கொம்பாசு (kompasu)புயலால் ஏற்பட்ட கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி11 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 7 பேர் காணாமற் போயுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 1600 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், காணாமற்போயுள்ளோரைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# கொலம்பஸ் சிலை மீது சிவப்புச் சாயம்

பிரித்தானியாவிலுள்ள பழைமையான கொலம்பஸ் சிலை மீது சிவப்புச் சாயம் பூசப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பக்கிங்காம் அரண்மனை அருகே பெல்கிரேவ் சதுக்கத்தில் அமைந்துள்ள இச் சிலையின் பீடத்தில், 1,446 முதல் 1,506 ஆம் ஆண்டு வரை கொலம்பஸின் வாழ்க்கையைப் பற்றி பொறிக்கப்பட்ட தகவல் மீதும் சிவப்பு சாயம் பூசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுக்கின்றது.

கடந்த ஒக்டோபர் 11ஆம் திகதி, அமெரிக்காவில் கொலம்பஸ் தினம் அனுசரிக்கப்பட்ட நிலையில், அவர் மூலம் வந்த ஐரோப்பியர்களால் பூர்வகுடிகள் ஒடுக்கப்பட்டதாகக் கூறி பல அமெரிக்க நகரங்கள் அந்நாளைப் பூர்வகுடிகளைக் கௌரவிக்கும் நாளாக கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பிரான்ஸ்

# உறங்கிய அகதிகள் மீது ரயில் ஏறியது

## மூவர் உயிரிழப்பு

பிரான்ஸ் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பியாரிட்ஸ் நகரானது, பல்வேறு நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்கான பிரதான போக்குவரத்துப் பாதையாக உள்ளது.

இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி பியாரிட்ஸ் நகருக்கு வந்த அகதிகள் சிலர், அங்குள்ள ரயில் தண்டவாளத்தில் உறங்கியுள்ள நிலையில், அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பது தெரியாத ரயில் ஓட்டுநர், ரயிலைச் செலுத்தியுள்ளார்.

இதனால் தண்டவாளத்தில் உறங்கிக் கொண்டிருந்த மூவர், சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ள நிலையில், நால்வர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**“ ரயில் தண்டவாளத்தில் உறங்கியுள்ள நிலையில், அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பது தெரியாத ரயில் ஓட்டுநர், ரயிலைச் செலுத்தியுள்ளார். இதனால் தண்டவாளத்தில் உறங்கிக் கொண்டிருந்த மூவர், சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்**



ஜப்பான்

# ஒரே பயணத்தில் உலக சாதனை படைத்த `Mirai`

சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஜப்பானிய வாகனத் தயாரிப்பு நிறுவனமான டொயோட்டாவின் மிராய் (Mirai) காரானது, அண்மையில் புதிய உலக சாதனையொன்றைப் படைத்துள்ளது.

இக்காரானது ஹைட்ரஜன் எரிபொருளைப் பயன்படுத்தி, மிக நீண்ட தூரம் பயணித்த வாகனம் என்ற பிரிவில் கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.

ஹைட்ரஜனால் இயங்கும் இக் காரானது, பயணத்தின் போது ஒரே ஒரு முறை, ஐந்து நிமிடம் மட்டுமே எரிபொருள் நிரப்பப்பட்டு, மொத்தம் 1,360 கிலோமீற்றர்களைக் கடந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

மேலும் இத் தூரத்தைக் கடக்க இரண்டு முழு நாள்கள் ஆனது என்ற தகவலையும் டொயோட்டா நிறுவனம், சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளது.




**“ ஹைட்ரஜனால் இயங்கும் இக் காரானது, பயணத்தின் போது ஒரே ஒரு முறை, ஐந்து நிமிடம் மட்டுமே எரிபொருள் நிரப்பப்பட்டு, மொத்தம் 1,360 கிலோமீற்றர்களைக் கடந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது**



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# பங்களாதேஷை வீழ்த்திய இலங்கை

இம்மாதம் ஆரம்பிக்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பங்களாதேஷுடனான போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், சௌமியா சர்க்காரின் 34 (26) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், நான்கு ஓவர்களை வீசியிருந்த துஷ்மந்த சமீர, 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்கு. 148 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, 12 ஓவர்களில் 79 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை இழந்தபோதும், அவிஷ்க பெர்ணான்டோவின் ஆட்டமிழக்காத 62 (42), சாமிக கருணாரத்ன ஆட்டமிழக்காத 29 (25) ஓட்டங்களோடு, 19 ஓவர்களில் மேலதிகமாக விக்கெட் எதுவையும் இழக்காமல் வென்றது. பந்துவீச்சில், சௌமியா சர்க்கார் மூன்று ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.




உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# சமநிலையில் இங்கிலாந்து ஹங்கேரி போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், இங்கிலாந்து நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், ஹங்கேரிக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோன் ஸ்டோன்ஸ் பெற்றதோடு, ஹங்கேரி சார்பாகப் பெறப்பட்ட கோலை றொலன்ட் சல்லாய் பெற்றிருந்தார்.

இதேவேளை, டென்மார்க்கில் நடைபெற்ற போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஒஸ்திரியாவை வென்ற டென்மார்க், உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது. டென்மார்க் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோகின் மஹ்லே பெற்றிருந்தார்.



உலகக் கிண்ணத்தின்போது

# இந்திய அணியில் வெங்கடேஷ் ஐயரும் இணைவு

இந்தியன் பிறீமியர் லீக் முடிந்த பின்னர் இம்மாதம் ஆரம்பிக்கவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணிக்கு வலைபந்துவீச்சாளர்களாக ஐக்கிய அரபு அமீரகத்தில் தங்கியிருக்குமாறு ஆவேஷ் கான், வெங்கடேஷ் ஐயரை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வினவியுள்ளது.

இவர்கள், ஷ்ரேயாஸ் ஐயர், ஷர்துல் தாக்கூர், தீபக் சஹர் ஆகியோரை உள்ளடக்கிய மேலதிக வீரர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# மீண்டும் மத்தியூஸ்

எதிர்கால இலங்கை அணிகளில் தேர்வு செய்யப்படுவதற்கு தயாராக உள்ளதாக இலங்கையணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் அறிவித்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், உடனடியாக அமலுக்கு வரும் வகையில் உயர் திறன் நிலையத்தில் பயிற்சியில் ஈடுபடும் குழாம்களுடன் மத்தியூஸ் இணையவுள்ளதுடன், எதிர்கால சர்வதேச சுற்றுப் பயணங்களில் கவனம் செலுத்தவுள்ளதாக சபை மேலும் தெரிவித்துள்ளது.

இறுதியாக, இலங்கையை இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மத்தியூஸ் பங்கேற்றிருந்தார்.



# சில வாரங்களுக்கு வரான் இல்லை

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்களவீரரான ரஃபேல் வரான் சில வாரங்களுக்கு விளையாட மாட்டார் என அக்கழகம் உறுதிப்படுத்தியுள்ளது.

பிரான்ஸுக்காக விளையாடும்போது அடி வயிற்றுப் பகுதியில் வரானுக்கு காயம் ஏற்பட்ட நிலையிலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

யுனைட்டெட்டின் இன்னொரு பின்களவீரரான ஹரி மக்குவாயாவும் காயம் காரணமாக விளையாட முடியாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 14 ஒக்டோபர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.